# .மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
# அசல் வழக்கு எண். 28/2013

DW1 – செல்வமணி (எ) மகாராஜன் த/பெ கண்ணப்பன்
நாள்–20.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

புல எண் 54/2–ன் மொத்த விஸ்தீரணம் சுமார் 40 5/8 செண்ட் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.4–ன் படி புல எண் 54/2–ல் எனது தாத்தா 3 ¼ செண்ட் விலைக்கு வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஏற்பட்ட காலத்தில் புல எண் 54/2 ஆனது உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ன் படி எனது தகப்பனார் புல எண் 54/2C–ல் 6 செண்ட் கிரயம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா சிவபிரகாசத்துடன் பிறந்த சகோதரர்கள் நாராயண படையாட்சி, மகாலிங்கம் படையாட்சி ஆவார்கள்.

பி.சா.ஆ.1 படி எனது தாத்தா சிவபிரகாசத்திற்கு புல எண் 54/2–ல் 1 5/8 செண்ட் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1, பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.7 ன் படி தான் எனக்கு 10 செண்ட் பாத்தியப்பட்டதாக வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.7–க்கான மூலப்பத்திரம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.7–ல் மகாலிங்கம் வாரிசுதாரர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது எனது அப்பாவிற்கு தான் தெரியும். மகாலிங்கம் படையாட்சி ஆவண எண் 1584/1949 படி அங்கப்ப படையாட்சி குமாரர், நாகப்ப படையாட்சியிடமிருந்து 1 5/8 செண்ட் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மகாலிங்கம் படையாட்சியின் மனைவி பெயர் தான் அம்மாக்கண்ணு என்றால் சரிதான். மேற்படி அம்மாக்கண்ணு ஆவண எண் 2450/1953-ல் 1 ¾ செண்ட் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எங்களது இடம் சரியாக இருந்ததால் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை. அம்மாக்கண்ணுக்கு 1 ¾ மற்றும் மகாலிங்கத்திற்கு 1 5/8 ஆக மொத்தம் 3 ½ செண்ட் தான் பாத்தியம் என்றும், மகாலிங்கம் வாரிசுகள் 6 செண்டிற்கு ஏற்படுத்திக்கொடுத்த பி.சா.ஆ.7 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

எங்களுக்கு 10 செண்ட் பாத்தியம் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் வாதியின் மாமியாரும் மற்ற வாதிகளின் பாட்டியான ராஜம்மாளுக்கு வா.சா.ஆ.3 படி பாத்தியம் என்றால் சரியல்ல. 7 ½ செண்ட் தான் பாத்தியம். எனது தாத்தா வாங்குவதற்கு முன்பே கிரயம் பெறப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எங்களுக்கு 10 செண்ட் அனுபவம் இல்லை என நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.